www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

Language Code : **17**

इस पुस्तिका में **20** मुद्रित पृष्ठ हैं।
This booklet contains **20** Printed pages.

# SAS-24-II

**प्रश्न-पत्र-II / PAPER-II**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग-IV & V / PART-IV & V**

**मुख्य परीक्षा पुस्तिका संख्या / Main Test Booklet No.**

**मुख्य परीक्षा पुस्तिका कोड / Main Test Booklet Code**

**O**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें। / FOR INSTRUCTIONS IN TAMIL SEE PAGE 2 OF THIS BOOKLET.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं**।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **O**। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :

   भाग-IV : भाषा-I (तमिल) — (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) — (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं। **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा-I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

## INSTRUCTIONS FOR CANDIDATES

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page/marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **O**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :

   Part-IV : Language-I (Tamil) — (Q. 91 to Q. 120)
   Part-V : Language-II (Tamil) — (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part-V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ______________________
Name of the Candidate (in Capitals) :

अनुक्रमांक : (अंकों में) / Roll Number : in figures ______________________

: शब्दों में / in words ______________________

परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ______________________
Centre of Examination (in Capitals) :

परीक्षार्थी के हस्ताक्षर : ______________________ निरीक्षक के हस्ताक्षर : ______________________
Candidate's Signature : Invigilator's Signature :

Facsimile Signature Stamp of
Centre Superintendent : ______________________

www.prepp.in

Language Code : **17**

# SAS-24-II

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**O**

இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது

தாள்–II

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**

**இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள் :**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி–I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப்பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந்நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **O** ஆகும். இந்நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றேதானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இந்த தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி-IV : மொழி-I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி-V : மொழி-II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி-IV இல் மொழி-I க்கும், பகுதி-V இல் மொழி-II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.
8. தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி-**I** (பகுதி **IV** இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி-**II** (பகுதி-**V** க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.
9. இத்தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ______________________

: எழுத்தில் ______________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ______________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ______________________

Facsimile signature stamp of Centre Superintendent : ______________________

prepp
Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் **தமிழைத்**, தமிழ்**-I** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி-IV (கே.எண் : 91 - 120)** -க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part-IV (Q.No. 91-120)**, if they have opted **TAMIL** as **Language-I** only.

www.prepp.in

Your Personal Exams Guide

**PART–IV**

**LANGUAGE–I**

**TAMIL**

| |
|---|
| **பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.** |

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 91 - 99)**

நீலகிரி பழங்குடிமக்கள் அனைவரும் திராவிடமொழிகளைத் தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். தோடர்கள் பேசும் தோடாமொழியும் கோத்தர்கள் பேசும் கோத்தா மொழியும் தனிமொழிகளாகக் கருதப்படுகின்றன. ஆனால், இருளர்கள் பேசும் இருள மொழி தமிழ்மொழியின் கிளை மொழியா அல்லது தனியொரு மொழியா என்ற ஐயம் மொழியியல் அறிஞர்களுக்கிடையே உண்டு. இருளமொழியைப் பற்றி ஆராய்ந்த டிப்ளாத் என்பவர் இது தமிழின் கிளைமொழி எனக் கூறுகிறார். ஆனால், கமில் சுவலபில் இது ஒரு தனிமொழியென்றும் தமிழிலிருந்து வேறுபட்டது என்றும் கூறுகிறார். இம்மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பெரியாழ்வாரின் ஆராய்ச்சியின் முடிவின்போது இதில் தெளிவு ஏற்படும். குறும்பர்கள் பேசும் மொழியில் கன்னட மொழியின் சாயலையும் தமிழ் மொழியின் கலப்பையும் காணமுடிகிறது. அதனால் இதனைக் கன்னடம் அல்லது தமிழ் மொழியின் கிளைமொழி எனக் கருதுவர். பனியர்கள் மொழி தமிழும் மலையாளமும் கலந்த கலப்பாகக் காணப்படுகின்றது. இது போன்றே காட்டு நாயக்கர் பேசும் மொழியும் மலையாள-தமிழ் கலவையாகவே தோன்றுகிறது. கசவர்கள் பேசும் மொழி கன்னட மொழியின் கிளை மொழி என அம்மொழியைப் பற்றி ஆராயும் சிதம்பரநாதன் குறிப்பிடுகிறார்.

பெட்ட குறும்பர்கள் பேசும் மொழி பெட்ட குறும்பா என்றழைக்கப்படுகிறது. இவர்களது மொழி தனியொரு மொழியாகக் கருதப்பட வேண்டிய நிலையில் உள்ளது. எனினும் இம்-மொழியைப் பற்றி தெளிவான ஒரு ஆராய்ச்சியே இவ்வினாவிற்கு முடிவான விடையைத் தரும்.

அதிலும் நெடுங்கால வாழ்வும் வரலாறும் கொண்ட தமிழ்மொழியில் பண்டைக்கால முதற்கொண்டே பல்வேறு கிளைமொழிகள் இருந்துள்ளன என்பதைப் பலரும் உணர்வர் சங்ககால மொழியிலும் இந்நிலை உண்டு. இதுபோன்றே கல்வெட்டுத் தமிழிலும் பல கிளைமொழிகள் உண்டு.

மேலும் தோடா, கோத்தா போன்ற மொழிகளில் பரம்பரை பரம்பரையாக வாய்வழி வரும் பாடல்கள் ஏராளமாக உள்ளன. இப்பாடல்களைத் திரட்டி ஆராயின் திராவிட மொழிகளின் கவிதை வளம் பற்றி அறிவதற்கு இவை மிகவும் துணைபுரிவனவாக அமையும்.

**91.** திராவிடமொழிகளின் கவிதைவளம் அறியத் துணைபுரிவன :

(1) பழங்குடிமொழிகளின் வாய்மொழிப் பாடல்கள்

(2) பழங்குடிகளின் ஓவியக்கலை

(3) காட்டுநாயக்கரின் இலக்கியம் மட்டும்

(4) குறும்பர் இலக்கியம் மட்டும்

**92.** நீலகிரிப் பழங்குடிகள் மொழி ________.

(1) கன்னட மொழி (2) தமிழ் மொழி

(3) திராவிட மொழி (4) மலையாள மொழி

**93.** கல்வெட்டுத் தமிழிலும் ________ உண்டு.

(1) குறும்பர் மொழி (2) பழங்குடி மொழி

(3) கிளை மொழி (4) தோடர் மொழி

**94.** கன்னடத்தின் கிளைமொழி :

(1) தமிழ் (2) கசவர் மொழி (3) மலையாளம் (4) தெலுங்கு

**95.** கிளைமொழிகள் ________ உள்ளன.

(1) பேச்சு மொழியாக (2) பழங்குடி மொழியாக

(3) எழுத்து மொழியாக (4) கவிதை மொழியாக

**96.** தனிமொழிகளாகக் கருதப்படுவன :

(1) காட்டுநாயக்க மொழி, தோடா மொழி

(2) தோடா மொழி, கோத்தா மொழி

(3) பனியர் மொழி, தோடா மொழி

(4) கசவர் மொழி, கோத்தா மொழி

**97.** கன்னடத்தின் சாயலையும் தமிழ்மொழியின் கலப்பையும் உடைய மொழி :

(1) தோடர்கள் மொழி (2) குறும்பர் மொழி

(3) பனியர்கள் மொழி (4) கசவர் மொழி

**98.** கமில்சுவலபில் இருள மொழியை ________ என்கிறார்.

(1) தனி மொழி (2) மலையாளத்தின் கிளைமொழி

(3) தமிழின் கிளைமொழி (4) கன்னடக் கிளைமொழி

**99.** மலையாளமும் தமிழும் கலந்த மொழி :

(1) பெட்ட குறும்பா (2) தோடா மொழி

(3) காட்டுநாயக்க மொழி (4) பனியர் மொழி

**பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 100 - 105)**

புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்;
பொங்கிய தெங்குஞ் சுதந்திர நாதம்;
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்!
வீதியெ லாமணு குற்றனர் மாதர்;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்;

அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை!
ஆருயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே!
பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்;
பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம்;

கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்;
சுருதிகள் பயந்தனை; சாத்திரங் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை யம்மே!
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய்!
நிர்மலை யே!பள்ளி யெழுந்தரு ளாயே!

நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ,
பொன்னனை யாய்!வெண் பனிமுடி யிமையப்
பொருப்பின னீந்த பெருந்தவப் பொருளே!

என்ன தவங்கள்செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே?
இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ?
இன்னுயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே!

**100.** பொருள் தருக : பார் <u>மிசை</u>

(1) அருகே (2) வெளியே (3) கீழ் (4) மேல்

**101.** ஆர்த்தன __________, __________; ஓதியன __________, __________.

(1) முரசம், புள்ளினம்; நாமம், வேதம் (2) வேதம், முரசம்; புள்ளினம், நாமம்
(3) நாமம், வேதம்; முரசம், புள்ளினம் (4) முரசம், நாமம்; புள்ளினம், வேதம்

**102.** வானில் கண்டது __________; கரத்தில் ஏற்றது __________.

(1) பேரொளி, கேடகம் (2) பேரொளி, சூலம்
(3) நிலவொளி, துந்துபி (4) தண்ணொளி, வாள்

**103.** இலக்கணக் குறிப்பு தருக : ஏழையம்

(1) தன்மை பன்மை (2) படர்க்கை பன்மை
(3) முன்னிலை ஒருமை (4) தன்மை ஒருமை

Prepp
Your Personal Exams Guide

**104.** பொன்னனை, பொருப்பின ________ ஆகும்.

(1) முரண் (2) மோனை (3) எதுகை (4) இயைபு

**105.** பொங்கியது ________; முழங்கியது ________.

(1) முரசம்; கொம்பு
(2) வேதம்; துந்துபி
(3) சங்கம்; நாதம்
(4) நாதம்; சங்கம்

**106.** சைகை மொழி பற்றிய கருத்தில் எது உண்மையற்றது ?

(1) சைகை மொழிக்கு ஓர் இலக்கணம் இல்லை.
(2) சைகை மொழிக்கு ஓர் இலக்கணம் உண்டு.
(3) சைகை மொழியில் பல வகைகள் உள்ளன.
(4) சைகை மொழி ஒரு இயற்கை மொழி.

**107.** வெவ்வேறு குழுக்களுக்கு இந்தக் கற்றல் பயிற்சி கொடுக்கப்பட்டது. இந்தச் சொல் வளப் பயிற்சி எவ்வாறு குறிக்கப்படுகிறது?

பின்வரும் சொற்களுடன் உறவுடைய சொற்கள் மற்றும் தொடர்களைக் காண்க.

குடும்பம் உறவுமுறை உணர்வு

(1) தொகுப்புச் சொல்வளம்
(2) சொல் வலைப்பின்னல்
(3) பொருள்சார் சொல்வளம்
(4) சொல் தொகுதிகள்

**108.** இலக்கணத்தின் கற்பித்தல் - கற்றல் முறையில் வழிமுறை அறிவு என்பது :

(1) இலக்கணக் கூறுகளின் விதிமுறைகளைத் தெரிந்து கொள்வது
(2) மொழியையும் அதன் பண்பாட்டையும் அறிந்து கொள்ளுதல்
(3) இலக்கணப் பயிற்சிகளை செய்வதை அறிவது
(4) இலக்கணக் கூறுகளைப் பற்றிய அறிவு

**109.** மாணவர் ஒருவர் செய்தித் தாளில் ஒரு குறிப்பிட்ட செய்தியைப் படித்து குறிப்பிட்ட தகவலைத் தெரிந்து கொள்ள முயற்சிக்கிறார். இந்த வாசிப்பு இவ்வாறு அறியப்படுகிறது :

(1) ஸ்கேனிங் (2) படிப்புத் திறமை (3) கிரிடிகல் ரீடிங் (4) ஸ்கிம்மிங்

**110.** ஓர் ஆசிரியர் ஆங்கிலத்தில் ஒரு கதையைச் சொல்லி மாணவர்களுக்குத் தெரிந்த மொழியில் குழுவாக இருந்து சொல்லிப் பார்க்கச் செய்து பிறகு வகுப்பறையின் பொது மொழியில் அவர்களைச் சொல்லிக் காட்டச் செய்கிறார். இந்த கற்பித்தல் முறை எவ்வாறு குறிக்கப்படுகிறது ?

(1) பன்மொழிக் கற்பித்தல்
(2) மொழித் தன்வயமாக்கல்
(3) டிரான்ஸ்லேங்குவேஜிங்
(4) பன்மொழிக் கொள்கை

**111.** வள்ளி ஆறாம் வகுப்பு மாணவி, அவள் தந்தை மதுரை, தமிழ்நாட்டிலிருந்து பஞ்சாபின் ஜலந்தருக்கு மாற்றலாகிறார், அதனால் அவளும் அங்கு செல்கிறாள். வள்ளியின் தாய்மொழி தமிழ், ஆங்கிலத்தைக் கல்வி மொழியாக அறிகிறாள். அவள் தான் வாழும் பகுதியில் இருந்து பஞ்சாபி மொழியைப் பேசவும் படிக்கவும் கற்றுக் கொள்கிறாள். இந்த மொழி கற்றல் பற்றி பின்வருவனவற்றில் எது சரியான வாசகம் ?

(1) தமிழ், பஞ்சாபி, ஆங்கிலம் மூன்று மொழிகளுமே மொழி கற்றல் வழி வருகின்றன.

(2) ஆங்கிலம் மொழி தன்வயமாக்கல் வழியும் தமிழும் பஞ்சாபியும் மொழி கற்றல் வழியும் வருகின்றன.

(3) தமிழும் பஞ்சாபியும் மொழி தன்வயப்படுத்தல் வழியும் ஆங்கிலம் மொழி கற்றல் வழியும் வருகிறது.

(4) அவள் பஞ்சாபி கற்பது மொழி தன்வயமாக்கல் வழியும், ஆங்கிலமும் தமிழும் மொழி கற்பதன் வழியும் வருகின்றன.

**112.** ஏழாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் இருவர் இருவராக மாணவர்களைப் பிரித்து பத்து வாக்கியங்களில் அமைந்த ஒரு கதையைத் தருகிறார். ஒருவர் முதல் வாக்கியத்தைப் படிக்க இரண்டாமவர் அதனை எழுதுகிறார். பிறகு இரண்டாம் வாக்கியத்தை இரண்டாமவர் படிக்க முதலாமவர் எழுதுகிறார். இவ்வாறாக முழு கதையையும் இருவர் இருவராக எழுதி முடிக்கின்றனர். பிறகு பாடப் பகுதியுடன் தாம் எழுதியவற்றைப் பார்த்து ஒப்பிடுகின்றனர். இந்தச் செயல்பாடு எவ்வாறு குறிப்பிடப்படுகிறது ?

(1) வாக்கியச் சொல்வதெழுதுதல் (2) ஒருவருக்கொருவர் சொல்வதெழுதுதல்

(3) மியூட்சுவல் ரைடிங் (4) மியூட்சுவல் லிஸனிங்

**113.** தினசரி வாழ்வில், நேருக்கு நேராக நாம் பயன்படுத்தும் மொழி :

(1) கம்யூனிகேடிவ் லாங்குவேஜ் ஸ்கில்ஸ்

(2) இன்டர்பெர்ஸனல் லாங்குவேஜ் புரோஃபிஷியன்ஸி

(3) காக்னிடிவ் அகடெமிக் லாங்குவேஜ் புரோஃபிஷியன்ஸி (ஸிஏஎல்பி)

(4) பேசிக் இன்டர்பெர்ஸனல் கம்யூனிகேஷன் ஸ்கில்ஸ் (பிஐஸிஎஸ்)

**114.** மேல்நிலை வகுப்பின் மாணவர்களுக்கு ஒரு பாடப்பகுதி / சிறுகதையைத் தந்து அதிகாரம் மற்றும் நீதி என்ற கருத்தினை மையமாக வைத்து அப்பகுதியின் அர்த்தம் மற்றும் கருத்துகளை படித்து அறியுமாறு ஓர் ஆசிரியர் கேட்கிறார். மாணவர்களிடம் எந்தத் திறனை வளர்க்க ஆசிரியர் முயற்சிக்கிறார் ?

(1) திறனாய்வு மொழி வளர்த்தல்

(2) உயர்நிலை மொழித் திறன்கள்

(3) திறனாய்வு எழுத்தறிவுத் திறன்கள்

(4) திறனாய்வு கல்வி புகட்டல்

**115.** ஓர் ஆசிரியரும் நான்கு மாணவர்களும் ஒருங்கிணைந்து வெவ்வேறு பாத்திரங்கள் ஏற்று செயல்படும் ஒரு கற்றல் முறை. பாடப் பத்தியின் உள்ளடக்கம் பற்றி உரையாடல் நிகழ்கிறது, அதன்வழி சேர்ந்திணைந்த வளர்ச்சி மண்டலம் ஒன்று உருவாகி, வாசித்துப் பொருள் புரிந்தறியும் திறன் மேம்படுகிறது. இந்த முறை இவ்வாறு குறிப்பிடப்படுகிறது :

(1) அமைப்பியல் அணுகுமுறை (2) மாதிரி வாசிப்புச் செயல்

(3) இலக்கண மொழி பெயர்ப்பு முறை (4) பரிமாற்ற கற்பித்தல்

**116.** குறைநீக்கக் கற்பித்தல் இதற்கானது :

(1) தம் கற்பித்தல் / கற்றல் உத்திமுறையைப் புரிந்து கொண்டு மாற்றி அமைக்க / மேம்படுத்த வேண்டிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு மானது.

(2) மொழிப் பாடத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற விரும்பும் மாணவர்கள், ஆசிரியர்களுக்கானது.

(3) மொழி கற்றலில் குறிப்பிட்ட பண்புக் கூறுகள் பற்றித் தெரிந்து கொள்ளும் தேவையுடைய மாணவர்களுக்கு உதவி செய்தல்.

(4) மொழி கற்கும் குறிப்பிட்ட மாணவருக்கேற்ப கற்பித்தல் முறையை மாற்றியமைக்கும் ஆசிரியர்களுக்கானது.

**117.** 'மொழிகளுக்கிடையிலான' அடையாளம் அறிதல் என்பது என்ன ?

(1) இரண்டாம் மொழி கற்றுக் கொள்வதற்கு தாய்மொழி இடையூறாக உள்ளது என மாணவர்கள் காண்பது.

(2) வெவ்வேறு மொழிகளைக் கற்பது வெவ்வேறு மொழித் திறன்களைக் கொண்டு வருகிறது.

(3) தாய்மொழியிலும் தான் கற்கும் மொழியிலும் ஒன்றே போல ஒரு பொருளை மாணவர்கள் பொருள்படுத்துவது.

(4) தாய்மொழியிலும் தான் கற்கும் மொழியிலும் ஒரு பொருளை மாணவர்கள் இருவேறு வகையில் பொருள்படுத்துவது.

**118.** கோழிக்கோடு பகுதியில் உள்ள ஒரு சமூகத்தினர் அப்பகுதியில் உள்ள மற்றவர்கள் பேசும் மலையாளத்திலிருந்து சற்றே வேறுபட்டுப் பேசுகின்றனர். அச்சமூகம் பேசும் மலையாளம் எவ்வாறு குறிக்கப்படும் ?

(1) மலையாளத்தின் சமூக வழக்கு (2) இரண்டும் இருவேறு மொழிகள்

(3) மலையாளத்தின் இரு வகைகள் (4) மலையாளத்தின் வட்டார வழக்கு

**119.** எது விரிவான வாசிப்பின் நோக்கம் இல்லை ?

(1) இலக்கணம் கற்பதற்கான வாசிப்பு

(2) மகிழ்வுக்கான வாசிப்பு

(3) நலம் பாராட்டுவதற்கான வாசிப்பு

(4) வேறு சூழல்நிலை அறிவைப் பொருத்திப் பார்க்க வாசித்தல்

**120.** மும்மொழித் திட்டத்தில் எது சரியான கருத்து ?

(1) தாய்மொழி / வீட்டுமொழி / முதல் மொழியாக ஹிந்தி

(2) தாய்மொழி / வீட்டுமொழி / ஆங்கிலம் முதல்மொழி

(3) தாய்மொழி / வீட்டுமொழி / முதல் மொழியாக பிராந்திய மொழி

(4) ஆங்கிலம் / ஹிந்தி / வீட்டுமொழி / முதல் மொழியாக உள்ளூர் மொழி

prepp
Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் **தமிழைத்,** தமிழ்-**II** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி-V (கே.எண் : 121 - 150)** -க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part-V (Q.No. 121-150)**, if they have opted **TAMIL** as **Language-II** only.

prepp
Your Personal Exams Guide

## PART–V

## LANGUAGE–II

## TAMIL

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 121 - 128)**

எனவே கோடியர் என்பதற்குப் பொருளைச் சரியாக வரையறுத்துக் கூறினால் 'கொம்பை ஊதுவோர்' எனப் பெறப்படும். ஆடுவோர் விழாக்களின் போது கொம்பை ஊதுவர். வழிபாட்டின் போது முருகனைத் தொழுது வேண்டும் நிலையில் யாழ், வயிர் இசைக்கருவிகள் இசைக்கப் பெறுகின்றன. ஆடுகளம் இனிய இசையாலும் வெறியாட்டாலும் எதிரொலிக்கும் போது எண்ணற்ற கொம்புகள் ஊதப்படுகின்றன; பேரொலி மணிகள் ஒலிக்கப்படுகின்றன.

சடங்கு வழிப்பட்ட ஆடலில் கொம்பு பயன்படுத்தப்பட்டது. வழக்கமான நடனமாடு வோரோடு, கொம்பு இடம் கொண்டது. அது இசையும் ஆடலும் வேறுபடுத்தப்படாத காலத்திற்குரியதாகும்.

வயிரியர் என்னும் சொல் மூங்கில், ஊதுகொம்பு எனப் பொருள்படும் 'வயிர்' என்பதிலிருந்து பெறப்பட்டது. இது திருமுருகாற்றுப்படையில் முருகனை வாழ்த்த இசைக்கும் இசைக் கருவிகளுள் ஒன்றாகக் கூறப்படுகின்றது. அலைவாய் என்னும் தலம் நோக்கி முருகன் வழக்கம் போல விரைந்து செல்கையில், தெய்வ முழவுகள் ஒலிக்கின்றன; ஊது கொம்புகள் உரக்க எக்காளமிடுகின்றன; வெண் சங்குகள் அழைக்கின்றன. பெரும் பான்மையான இடங்களில் வயிர், வளை எனப்பெறும் சங்கொடு சேர்த்துக் கூறப் பெறுகின்றது. இது போர்க்களத்தினும் ஓசை மிகச் செய்யும் எனக் கூறப்படும்.

கண்ணுளர் என்பது எதிலிருந்து பெறப்பட்டது என்பது தெளிவாக அறியப்படவில்லை. நடிகர்கள், கூத்தர்கள், பொருநர், பூவேலை செய்வோர் எனத் தமிழ்ப் பேரகராதி இச்சொற்குப் பொருள் தரும். விஸ்வநாத பிள்ளை இச்சொல்லுக்குப் புதிது புனைபவர், பொருநர் எனப் பொருள் தருகிறார். இதைப் போலவே கண்ணுள் (கூத்து) என்பதற்கு 'மாறுவேட நடனம்' எனப் பொருள் தருகிறார்.

'பார்ப்போரின் கண்ணைக் கவர்வதால் அவர்கள் கண்ணுளர் எனப்பட்டனர்' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். புகழ்பெற்ற இவ்வுரையாசிரியருக்கு மறுப்பாக, இஃது ஒரு நாட்டுப்புற வழக்காற்றுக்கான செவ்வியல் பாங்கு எடுத்துக்காட்டு என்று கூறுவது போதுமானதாகும். வீரநிலைக் காலத்திற்குப் பிற்பட்ட சிலப்பதிகாரத்தில் இச்சொல் அறிவார்ந்த ஓவியர்களையும் சித்திர வேலைக் காரர்களையும் குறிப்பதாக இருந்து பின்பு பொருளளவில் பெரிய மாற்றங்களை அடைந்திருப்பதாகத் தோன்றுகிறது. நச்சினார்க்கினியரே தன் உரையில் இச்சொல்லை ஆடற் கலைஞரைக் குறிக்கப் பயன்படுத்துகின்றார்.

**121.** இலக்கணம் தருக : வெண் சங்கு

(1) வினைத் தொகை (2) எதிர்மறை

(3) வேற்றுமைத் தொகை (4) பண்புப் பெயர்

**122.** கோடு என்பது _________ ஐ குறிக்கும் இது _________ இல் பயன்படுத்தப்பட்டது.

(1) யாழ், பாடல் (2) கொம்பு, ஆடல்

(3) கொம்பு, பாடல் (4) கொம்பு, நடிப்பு

**123.** யாழ் எனும் இசைக்கருவி _________ சேர்ந்தது.

(1) சடங்குகளோடு (2) வழிபாட்டோடு

(3) பாட்டுகளோடு (4) ஆட்டத்தோடு

**124.** வயிர் எனும் இசைக்கருவி _________ இருந்து தயாரிக்கப்பட்டது.

(1) மூங்கில் (2) இரும்பு (3) சங்கு (4) செம்பு

**125.** ஓசை மிகச் செய்யும் போர்க்கள இசைக் கருவி :

(1) குழல் (2) வளை (3) முழவு (4) பறை

**126.** நச்சினார்க்கினியர் கருத்துப்படி _________ என்பவர் _________ ஆவார்.

(1) கண்ணுளர், ஆடற்கலைஞர்

(2) கண்ணுளர், ஓவியர்கள்

(3) கூத்தர்கள், பூவேலை செய்வோர்

(4) நடிகர்கள், கூத்தர்கள்

**127.** இலக்கணக் குறிப்பு தருக : அலைவாய்

(1) ஏழாம் வேற்றுமை தொகை (2) எழுவாய் வேற்றுமை

(3) இரண்டாம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை தொகை

**128.** ஆடுகளத்தில் நிகழ்வது _________ ஒலிப்பவை _________, _________

(1) மணிகள், கொம்புகள், வெறியாட்டம்

(2) தேவராட்டம், மணிகள், குழல்

(3) கொம்புகள், யாழ், மணி

(4) வெறியாட்டம், கொம்புகள், மணிகள்

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 129 - 135)**

தேரிகாதா பாளி, பௌத்த சமய இலக்கியங்களில் ஒன்றாகும். 'திரிபிடகம்' என்னும் பௌத்த சமய நூல்களின் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. சூத்திரபிடகம், விநயபிடகம், அபிதம்ம பிடகம் என்பன திரிபிடமாக மூன்று பகுப்பாகத் தொகுக்கப்பட்டன. சூத்திரபிடகம், ஐந்து பிரிவுகளை உடையது. ஐந்தாவது பிரிவாகிய குட்டக நிகாயம் பதினைந்து உட்பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் ஒன்று தேரிகாதா - பிக்குணியின் பாடல்கள்.

திரிபிடகங்கள், அதன் துணை நூல்கள், எந்த மொழியில் உள்ளதோ, அதைப் பாளி மொழி என்று மரபுவழி குறிப்பிடுகிறார்கள். பல வட்டார மொழிகளைக் கொண்டது பாளிமொழி. இலங்கையிலும், மத்திய இந்தியாவிலும், பௌத்த மதத்தின் வேத மொழியாக, பாளி விளங்குகிறது. இலங்கையில் நிலவும் மரபிற் கிணங்க பாளி, மாகதி மொழி என்று குறிப்பிடப்படுகிறது. பௌத்த மதம் தோன்றிய மகதநாட்டின் மொழி என்ற அடிப்படையில் அவ்வாறு வழங்கப்படுகின்றது என்று கூறுவர். கி.மு. 535 கி.மு. 485 -க்கு இடைப்பட்ட காலத்தை கௌதமபுத்தரின் (கி.மு. 563 - கி.மு. 483) சமய போதனையின் விறுவிறுப்பான காலம் என்று கருதுகின்றனர். புத்தர் பெருமான் தமது எண்பதாவது ஆண்டில் கி.மு. 483 -ல் குசி நகரத்தில் மகா நிர்வாண நிலையை அடைந்தார். இதற்குச் சில நாட்களுக்குப் பின்னர் கூடிய, பலமொழிகள் பேசிய பௌத்தமதத் துறவிகளின் பேரவையில், புத்தரின் போதனைகளைப் பாளி மொழியில் தொகுப்பதென முடிவெடுத்தனர்.

பாளி மொழியின் வரலாற்றை நான்கு கட்டங்களாகப் பகுப்பர். அவையாவன :- காதாக்களின் மொழி : தொகுப்புகளின் உரைநடை மொழி (அதாவது மிலாந்தா என்னும் நூல்) : உரையாசிரியர்களின் மொழி; பிற்காலச் செயற்கையான கவிதை மொழி.

காதாக்களின் மொழி, கதம்பப் பண்புகளை உடையமொழி, வழக்கொழிந்த பழஞ் சொற்களையும், முற்றிலும் பாளி மொழிப் பண்புகளைக் கொண்ட சொற்களையும் உடையது.

காதாக்களின் பெண்பாற் கவிஞர்கள் அனைவரும் புத்தரின் சமகாலத்தவர்களாகவும், பலர் அவரது நேர்முக சீடர்களாகவும் இருந்தனர்.

பௌத்த மத மூத்த ஆண்பாற் துறவியைத் தேரர் எனவும், மூத்த பெண்பாற் துறவியைத் தேரி என்றும் போற்றுவது பௌத்த சமயமரபு. பாளி மொழிச் சொற்களான இவை, தமிழில் இதே வடிவங்களில் மணிமேகலை, நீலகேசி, தேவாரம் முதலிய நூல்களிலும் காணப்படுகின்றன. முதுமையைக் குறிக்கும் ஸ்தவிர என்ற வடமொழி வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்தது தேர - தேரி என்னும் சொற்கள். நற்குண, நற்செய்கைகளால் பெறும் மரியாதையும், மதிப்பும் உடைய முதியவர் என்ற பொருளில் தேர தேரி என்னும் சொற்கள் ஆளப்படுகின்றன; வயதாலோ அல்லது மூத்தவர் என்பதாலோ மட்டும் அல்ல.

**129.** சூத்திர பீடகத்தில் உள்ளது _________, தேரி என்பது _________ மொழிச்சொல்.

(1) விநயபீடகம், தமிழ்
(2) உரைநடைமொழி, தெலுங்கு
(3) தேரகாதா, பிராகிருதம்
(4) தேரிகாதா, பாளி

**130.** பெண் துறவி ________, கதம்பப் பண்புடையது ________.

(1) காதாக்களின் மொழி, விநய பீடகம்

(2) தேரர், அபிதம்ப பீடகம்

(3) தேரி, காதாக்களின் மொழி

(4) திரிபீடகம், பௌத்தம்

**131.** _________, ________ பௌத்தத் துறவிகளின் இயல்புகள் பாளிமொழியில் தொகுக்கப்பட்டது ________.

(1) நற்குணம், நற்செயல், புத்தரின் போதனை

(2) அமைதி, கவிதைமொழி, தேவாரம்

(3) துறவு, நற்செயல், மணிமேகலை

(4) கதம்பப் பண்பு, பாளிமொழி, நீலகேசி

**132.** புத்தர் மகாநிர்வாணமடைந்த இடம் _________.

(1) குசி (2) நேபாளம் (3) திபெத் (4) இலங்கை

**133.** பாளிமொழியின் வரலாறு - இலக்கணம் தருக.

(1) நான்காம் வேற்றுமை (2) ஏழாம் வேற்றுமை

(3) இரண்டாம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை

**134.** பெண் துறவிகளையுடைய தமிழ் இலக்கியங்கள் :

(1) மதுரைக்காஞ்சி, நீலகேசி (2) மணிமேகலை, குறிஞ்சிப்பாட்டு

(3) மணிமேகலை, திருக்குறள் (4) நீலகேசி, மணிமேகலை

**135.** பாளிமொழியின் வரலாறு ________.

(1) தேரகாதா (2) நான்கு கட்டங்கள்

(3) திரிபீடகம் (4) தேரிகாதா

**136.** தேசிய கல்விக் கொள்கை 2020 -படி மொழிக் கல்வி பற்றிய கருத்தில் எது தவறானது ?

(1) மும்மொழித் திட்டத்தின் கீழ் இந்திய மொழிகளைக் கற்பது

(2) மும்மொழித் திட்டத்தின் கீழ் ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்பது

(3) மும்மொழித் திட்டத்தின் கீழ் ஒரு செம்மொழியைக் கற்பது

(4) மும்மொழித் திட்டத்தின் கீழ் தாய்மொழி / வீட்டு மொழியைக் கற்பது

**137.** எட்டாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் ஆங்கிலத்தில் ஐந்து வாக்கியங்கள் உள்ள பாடப் பத்தியை இரண்டு முறை படித்து மாணவர்களைக் கவனமாகக் கேட்கச் சொல்கிறார். பிறகு நான்கு நான்கு பேராக மாணவர்களைப் பிரித்து கேட்ட பகுதியின் கருத்துக்கு நெருக்கமான பத்தியை எழுதச் சொல்கிறார், ஆனால் அதே பத்தியைத் திரும்ப எழுதக் கூடாது என்றும் சொல்கிறார். இந்தப் பயிற்சி எவ்வாறு குறிப் பிடப்படுகிறது ?

(1) ஒட்டுமொத்த சொல்வதெழுதுதல்
(2) கவனித்தறிதல் பணி
(3) எழுத்துச் செயல்முறை
(4) பத்தி சொல்வதெழுதுதல்

**138.** நன்கு எழுதும் திறன் பெற எந்தச் செயல்பாடு பயன்படுகிறது ?

(1) விரைந்த சிந்திப்பு - கருத்துகளை விரைந்தெழுதுதல் - முன்வரைவு எழுதுதல் - செம்மைத் திருத்தம் செய்தல் - அடிப்படைக் கருத்துகளைக் குறித்தல் - இறுதி வடிவம் தருதல்.
(2) விரைந்த சிந்திப்பு - கருத்துகளை விரைந்தெழுதுதல் - அடிப்படைக் கருத்துகளைக் குறித்தல் - முன் வரைவு எழுதுதல் - செம்மைத் திருத்தம் செய்தல் - இறுதி வடிவம் தருதல்.
(3) விரைந்த சிந்திப்பு - அடிப்படைக் கருத்துகளை எழுதுதல் - முன்வரைவு செய்தல் - கருத்துகளை விரைந்தெழுதுதல் - செம்மைத் திருத்தம் செய்தல் - முடிவு வடிவம் தருதல்.
(4) விரைந்த சிந்திப்பு - கருத்துகளை விரைந்தெழுதுதல் - முன்வரைவு எழுதுதல் - அடிப்படைக் கருத்துகளைக் குறித்தல் - செம்மைத் திருத்தம் செய்தல் - முடிவு வடிவம் தருதல்.

**139.** மொழி கற்றலில் எது சரியாகப் பொருந்தி வரும் வாசகம் ?

(1) தாய்மண் மொழி / தாய்மொழி இரண்டாம் மொழி கற்பதற்குத் துணையாக உள்ளது.
(2) முதல் மொழி கற்றலும் இரண்டாம் மொழி கற்றலும் முற்றிலும் வேறுபட்டவை.
(3) தாய்மண் மொழி / தாய்மொழி இரண்டாம் மொழி கற்பதில் இடையூறாக அமைகிறது.
(4) தாய்மண் மொழி / தாய்மொழி இரண்டாம் மொழி கற்பதில் எந்தப் பங்கும் வகிப்பதில்லை.

**140.** ஏழாம் வகுப்பு மாணவி கனிமொழி தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம் பேசக் கூடியவள். வீட்டில் தன் பெற்றோர்களிடம் நான்கு மொழிகளையும் சரளமாகப் பேசுகிறாள். ஆனால் பள்ளிக்கூடத்தில் தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் மட்டுமே பேசுகிறாள். அவைதான் ஆசிரியர்களும் நண்பர்களும் அறிந்த மொழிகள். இந்தப் பழக்கம் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது ?

(1) கோட் மூவிங்
(2) இன்டர் லாங்குவேஜ்
(3) டிரான்ஸ்லிங்குவல் எபிலிடி
(4) கோட் மெஷ்ஷிங்

**141.** கல்விப்புல மொழி பயிற்சித்திறன் அல்லது வெவ்வேறு உள்ளடக்கப் பகுதிகளுக்குத் தேவையான மொழி என்பதை இது குறிக்கிறது :

(1) கம்யூனிகேடிவ் லாங்குவேஜ் புரோஃபிஷியன்ஸி

(2) காக்னிடிவ் அகடமிக் லாங்குவேஜ் புரோஃபிஷியன்ஸி (சிஏஎல்பி)

(3) இருமொழிகளுக்கிடையிலான பயிற்சித் திறன்

(4) பேசிக் இன்டர்பெர்ஸனல் கம்யூனிகேஷன் ஸ்கில்ஸ் (பிஐஸிஎஸ்)

**142.** தாங்கள் கற்கும் பாடப் பொருளுக்கு எதிரான பார்வையை மாணவர்கள் தெரிந்து கொள்ள வைத்து அதைக் கூடுதலாகப் புரிந்து கொள்ள அனுமதிக்கும் ஒரு சூழ்நிலை. மாணவர்களிடம் எந்த திறனை இது மேம்படுத்த முயல் கிறது ?

(1) திறனாய்வு தன்மை கொண்ட எழுத்தறிவு

(2) எழுத்தறிவு வளர்ச்சி

(3) திறனாய்வு பகுத்தாய்வு

(4) செயலுருவாக்க அடிப்படையிலான கற்பித்தல் முறை

**143.** ஆறாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் கரண்டி, தட்டு, பாத்திரங்கள், பெட்டிகள், வறுவல் பாத்திரம் போன்றவற்றை வகுப்பறைக்குக் கொண்டு வந்து அவற்றின் பெயர்களைச் சொல்லித் தந்து, சமையலறையைப் பற்றிய விவரிப்பு ஒன்றை எழுதக் கற்பிக்கிறார். மொழிக் கற்பித்தலில் இந்தப் பொருள்கள் எவ்வாறு குறிக்கப்படுகின்றன ?

(1) சமையல் பாத்திரங்கள் (2) நிஜவாழ்க்கைச் செயல்பாடுகள்

(3) கற்பித்தல் கருவிகள் (4) ரியலியா

**144.** சமூக அறிவியல் வகுப்பில் உள்ள மாணவர்கள் விரிவுரை ஒன்றைக் கேட்டு அதன் முக்கிய கருத்துகளைக் கவனத்தில் கொண்டு குறிப்புகள் எடுக்க முயல்கின்றனர், இந்த திறன் எவ்வாறு குறிக்கப்படுகிறது ?

(1) எழுதுதல் திறன் (2) புரிந்தறிதல் திறன்

(3) படித்தல் திறன் (4) கவனித்தறிதல் திறன்

**145.** கற்றல் விளைவுகளை அறிதல் மாணவர்களுக்கு இதனை அளிக்கிறது :

(1) கற்றலின் அனைத்துத் திறன்களிலும் குறைந்தபட்ச கற்றல் நிலையை அடைதல்.

(2) தெளிவான சொற்களில் சொல்லுதலுக்குரிய மொழிக் கூறுகளைப் பற்றிய அறிவை அடைதல்.

(3) குறிப்பிட்ட சொற்களில் சொல்லும்படியான இலக்கண அறிவை அடைதல்.

(4) தெளிவான சொற்களில் சொல்லுதலுக்குரிய இயல்திறன் அடைதல்.

**146.** 'டிரான்ஸ்லாங்குவேஜிங்' என்பது என்ன ?

(1) வகுப்பறையில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்தும் ஒரு கல்வி கற்பித்தல் முறை.

(2) ஒரு பள்ளியில் எத்தனை மொழிகள் கற்பிக்கப்படுகின்றன என்பது பற்றிய கல்வியில் மொழி பற்றிய கொள்கையைக் குறிக்கிறது.

(3) மொழி கற்பித்தல் - கற்றல் வகுப்பில் ஒரு மொழியில் இருந்து மற்றொரு மொழிக்கு நகர்வதைக் குறிக்கிறது.

(4) மொழிகள் காலப்போக்கில் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதைப் புரிந்து கொள்வதைக் குறிக்கிறது.

**147.** பின்வரும் கேள்வியின் வகைமையியல் என்ன ? கண்டறிக.
சிறுமி ஒருத்தியின் துயரங்கள், துன்பத்தை எதிர்கொள்ளும் துணிவு பற்றிய கதையைப் படித்து நீங்கள் உணர்ச்சி நெகிழ்வு கொள்கிறீர்கள். அவளைப் பாராட்டி ஒரு கடிதத்தை எழுத வேண்டும். 120 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.
(1) சூழல்பொருத்திப் பொருள் கூறும் கேள்வி
(2) டிஸ்கர்ஸிவ் கேள்வி
(3) எக்ஸ்பிரஸிவ் கேள்விகள்
(4) நீண்ட விடைக் கேள்விகள்

**148.** மும்மொழித் திட்டம் பற்றிய சரியான கருத்து எது ?
(1) எல்லாக் குழந்தைகளும் அலுவல் மொழி, இந்தியில் தம் பள்ளிக் கல்வியைத் தொடங்குகின்றனர், தம் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடிக்கும் போது குறைந்தது இரண்டு மொழிகளைக் கூடுதலாகக் கற்கிறார்கள்.
(2) எல்லாக் குழந்தைகளும் தமது தாய்மொழி / வீட்டு மொழியில் பள்ளிக் கல்வியைத் தொடங்கி தம் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடிக்கும் போது குறைந்தது இரண்டு மொழிகளைக் கூடுதலாகக் கற்கிறார்கள்.
(3) எல்லாக் குழந்தைகளும் தம் பள்ளிக் கல்வியை ஆங்கிலம் வழி / வீட்டு மொழி வழித் தொடங்குகின்றனர் பிறகு தம் உயர்நிலைக் கல்வியை முடிக்கும்போது கூடுதலாகக் குறைந்தது இரண்டு மொழிகளைக் கற்கிறார்கள்.
(4) எல்லாக் குழந்தைகளும் தம் மாநிலத்தின் மொழியில் பள்ளிக் கல்வியைத் தொடங்குகின்றனர், தம் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடிக்கும் போது குறைந்தது இரண்டு மொழிகளைக் கூடுதலாகக் கற்கிறார்கள்.

**149.** பேச்சுப் பயிற்சி வழி மொழியின் முறையான இயல்புகளை முழுமையாகத் தெரிந்து கொள்வதை மொழி கற்றலின் இன்றியமையாத பகுதியாகச் சொல்லும் முறையியல் எது ?
(1) இலக்கண மொழி பெயர்ப்பு முறை
(2) முழு உடல் சைகை வெளிப்பாடு (டிபிஆர்)
(3) ஆடியோலிங்குவலிஸம்
(4) தகவல் தொடர்பு மொழி கற்பித்தல்

**150.** கருத்தறிக்கையிட்டுச் சொல்லும் அறிவு என்பது :
(1) இலக்கணக் கூறு ஒன்றில் உள்ள பிழையை எவ்வாறு கண்டறிவது எனத் தெரிந்திருத்தல்
(2) இலக்கணப் பயிற்சியை எவ்வாறு எழுதுவது எனத் தெரிந்திருத்தல்
(3) ஒரு மொழியின் சொல் உச்சரிப்புகளைத் தெரிந்திருத்தல்
(4) இலக்கணக் கூறுகள் பற்றிய அறிவு

- o O o -

www.prepp.in

Prepp Your Personal Exams Guide

SPACE FOR ROUGH WORK

## : கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் **பக்கம் 2**-ல் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் **நீலம்/கருப்பு பந்துருள்முனைப் பேனா**வினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும். குறியீடு செய்யப்பட்ட விடையை மாற்ற இயலாது.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச்சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர். விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப்பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டு வரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும். **மேலும், தேர்வர்கள் தங்களது இடது பெருவிரல் அடையாளத்தை வருகைப் பதிவுத் தாளில், ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பதிவு செய்யவேண்டும்.**
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்து விதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச்சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. **தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத்தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.**

## निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **नीले/काले बॉल पॉइन्ट पेन** से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के कोड या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
5. परीक्षा पुस्तिका/उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका कोड व संख्या को परीक्षार्थी सही तरीके से उपस्थिति-पत्र में लिखें।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी। इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए। इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और परीक्षार्थी विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं उपस्थिति-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार उपस्थिति-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा। **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान उपस्थिति-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी परीक्षण संस्था के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला परीक्षण संस्था के नियमों एवं विनियमों के अनुसार होगा।
14. किसी भी परिस्थिति में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल/कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र निरीक्षक को अवश्य सौंप दें। *परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***

## READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Blue / Black Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against the candidate including cancellation of examination.
9. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his/her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Examining Body with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Examining Body.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room. *The candidates are allowed to take away this Test Booklet with them.***